# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்

*(2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2012, மாச்சு மாதம் 30 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம்*

[*2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ 05/2012*

## *2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

*1.* இச்சட்டம் *2012*ஆம் ஆண்டின் *9* ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் இயைபான பிரிவுகளில் வெவ்வேறான தொழிற்பாட்டு தேதிகள் குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய *2012* சனவரி *1*ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்திருப்பதாக கருதப்படுதலும் வேண்டும்.

*2009ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்*

*2.* (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) *2009*ஆம் ஆண்டின் *9*ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் *3*ஆம் பிரிவானது அதன் *(2)*ஆம் உட்பிரிவின் (iv)ஆம் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*(1)* அதன் (iv)ஆம் பந்தியின் *(2)*ஆம் உட்பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும்:-

"*(2)* *2007*ஆம் ஆண்டின் *48*ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், கருவாடு, பால்மா அல்லது மிளகாய் எனும் பொருட்கள் அத்தகைய பொருளின் இறக்குமதியாளரினால் அப்பொருட்கள் அதனைத் தொடர்ந்து விற்பனை செய்யப்படுகின்றவிடத்து; அத்துடன்" ;

*(2)* உட்பந்தி *(3)*இன் "பணத்தொகை என்று பொருளாகும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "பணத்தொகை என்று பொருளாகும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் (3)ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை சேர்ப்பதன் மூலமும்:-

"(4) ஏதேனும் அச்சிடப்பட்ட புத்தகம் (2011 யூலை 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(5) ஏற்றுமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருள்;

(6) எவரேனும் ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதிக்காக விற்பனை செய்யப்படட ஏதேனும் பொருள்;

(7) அதன் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யப் பட்ட உடன் பால், பச்சை இலை வகை, கறுவா அல்லது இறப்பர் (மரப்பால், கிரேப் அல்லது இறப்பர் தகடு); அத்துடன்

(8) எரிபொருள் நிரப்பு நிலையைங்களில் விற்பனை செய்யப்பட்ட பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு "பண்டங்களின் பெறுமதியின் வீதாசாரப்படி வரி வரவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"பண்டங்களின் பெறுமதியின் வீதாசாரப்படி வரி வரவுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், இயைபான ஏதேனும் காலாண்டுக்கான அத்தகைய வரவு, அக்காலாண்டுக்காக அவ்வாறு செலுத்தப்படற் பாலதான வரியை விஞ்சுமிடத்து, விஞ்சு தொகையானது, அவ்வியைபான காலாண்டை உடனடுத்து வருகின்ற இயைபான காலாண்டுக்காக 4ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட முன்கூட்டிய வரிக்கொடுப்பனவாக கருதப்படுதல் வேண்டும்.".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையானது பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) அவ் அட்டவணையின் பாகம் 1 இல் –

(அ) அதன் (iii)ஆம் விடயத்தில் ''உண்மையில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதென'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய ஏற்றுமதியாளரினால் நேரடியாகவோ அல்லது ஏற்றுமதி நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட வியாபார வகமொன்றின் மூலமோ உண்மையில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதென (2009 சனவரி 1ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக)'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (xvi)ஆம் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய விடயத்தை இடுவதன்மூலம் :-

''(xviஅ) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட், மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் அல்லது எயார் லங்கா கேற்றறிங் சேர்விஸஸ் லிமிட்டெட்டிற்கு ஒப்படைக்கப் பட்டுள்ள பண்டமாகவுள்ள சர்வதேச போக்குவரத்து சேவைகளை வழங்கும் நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்பட்ட (தனியாள் பயன்பாட்டிற்கான மோட்டார் வாகனங்கள் மற்றும் பண்டங்கள் தவிர்ந்த) ஏதேனும் பண்டங்கள்;'';

(இ) (xxvi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களை இடுவதன்மூலம்:-

''(xxvii) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட விமானம் மற்றும் கப்பல்கள் (2009, ஓகத்து 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(xxviii) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட மரக் கட்டைகள்;

(xxix) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட நூலிழை;

(xxx) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட குருடர்களுக்கான வெள்ளைப் பிரம்புகள் (2011, திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(xxxi) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட பார்வையற்றவர்களுக்கான தட்டச்சுகள் (2011, திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(xxxii) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட பார்வையற்றவர்களுக்கான தட்டச்சுக்களின் பாகங்கள் (2011, திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(xxxiii) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட பார்வையற்றவர்களுக்கான எழுதுகடதாசிகள் மற்றும் பலகைகள்;

(xxxiv) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப்படுத்தப்பட்ட இயந்திரத்துக்கான இயக்க ஆற்றலிலானதோ அல்லவோ அல்லது வேறுவகையான இயந்திரநுட்பத்தில் முன்னோக்கி செல்கின்ற ஊனமுற்ற ஆட்களுக்கான வண்டிகள் (2011, திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(xxxv) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபார பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகைப் படுத்தப்பட்ட (ஊன்றுகோல், அறுவை பட்டை, தாங்கு சட்டகம், சிம்பு மற்றும் வேறு முறிவிற்கான பிரயோகங்கள், உடலின் செயற்கை பாகங்கள், கேட்டல் உதவிகள் மற்றும் குறைபாடு அல்லது ஊனத்திற்கு இழப்பீடு வழங்குவதற்கான வேறு அணியப்படுகின்ற அல்லது கொண்டு செல்லப்படுகின்ற அல்லது உடலில் உள்நாட்டப்படுகின்றன உள்ளடங்கலாக) எலும்பு நேர்ப்படுத்தல் (2011, திசெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறுவதாக) ;

(xxxvi) இறக்குமதியின்போது கிலோ கிராம் ஒன்றிற்கு 75 ரூபா தீர்வைக்குட்பட்ட துணி;

(xxxvii) *உற்பத்தியாளரினால் விற்பனையின் போது உள்ளூரில் உற்பத்தி செய்யப் பட்ட களிமண் கூரை ஓடுகள் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள்; அத்துடன்*

(xxxviii) *அதன் கலைஞனால் விற்பனையின் போதான வண்ண ஓவியங்கள்.".*

*நட்டோத்தரவாதம்.*

**5**. *விடயத்திற்கேற்ப உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் அல்லது 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் 2012 சனவரி 1ஆந் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியின் போது எந்த ஆளுக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகின்றதோ, அந்த ஆளொருவரிடமிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு கணிப்பிடப்பட்ட வரியைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய சேகரிப்பானது எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியானதாக செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேகரிப்பு தொடர்பில் எல்லா குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிற்கெதிராக விடயத்திற்கேற்ப உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்தர வாதம் செய்யவும்படுகின்றார்.*

*ஒவ்வாமை விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. *இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்